IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.14/2019
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்:4.20 p.m.

வா.சா. 1 சாட்சி நாகராஜ் த.பெ.செல்வராஜ்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 18.03.2025 in accordance with the provisions of Act XX141.**

4ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1.1ம்வாதியான எனது தந்தைதான் அசல் வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும், வழக்கு விபரங்களும் 1ம்வாதிதான் சொன்னார் என்றாலும் சரிதான். எனது தாத்தா பெயர் பிச்சமநாயுடு என்றால் சரிதான். அவரது தந்தை பெயர் தெரியாது. மேற்படி பிச்சமாநாயுடுவின் தந்தை எப்போது இறந்தார் என்றால் தெரியாது. எனது தந்தைக்கு பூர்வீகம் திருப்பரங்குன்றம் ஆகும். திருப்பரங்குன்றம் கிராமம் சர்வே எண் 194/14Aல் உள்ள கதவு எண் 188ல் கட்டுப்பட்ட வீட்டிற்காகத்தான் எனது தந்தை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி வீடு மற்றும் காலியிடம் 638 ச.அடி என்றால் சரிதான். மேற்படி 638 ச.அடி கொண்ட சொத்து திருப்பரங்குன்றத்தில் கிரிவல பாதைக்கும் திருப்பரங்குன்றம் மலைக்கும் இடையே கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்க தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். 638 ச.அடியில் 4ம்பிரதிவாதியான திருப்பரங்குன்றம் திருக்கோவிலுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சரிதான்.

3. மேற்படி பரிகாரத்தை எதன் அடிப்படையில் கேட்டுள்ளேன் என்றால் கிராம நத்தம் என்பதால் அந்த பரிகாரத்தை கேட்டுள்ளேன். தாவாச் சொத்து கிராம நத்தத்தில் கட்டுப்பட்டுள்ளது என்பதற்கு ஏதாவது ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை பட்டா கேட்டு மனு கொடுத்ததற்கு எனது தந்தை பெயரில் பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நாங்கள் குடியிருந்து வரும் சொத்தின் புலஎண் 358/1 ஆகும்.

4. சர்வே எண் 358/1 கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் கிராம நத்தத்தில் உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்தது சர்வே எண் 196/14Aக்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வழக்குச் சொத்து சர்வே எண் 358/1ல் உள்ளது. சர்வே எண்ணை திருத்தம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியின் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 4.35 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.